SURESH'
IAS ACADEMY




# 08.06.2026 செய்திகள்

## யுபிஐ அறிமுகம் செய்த 9-வது நாடு கம்போடியா

- க்யூ ஆர் கோட் மூலம் பணம் செலுத்தும் யுபிஐ நடைமுறையை இந்தியா அறிமுகம் செய்தது. இது சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம், பிரான்ஸ், மொரீசியஸ், நேபாளம், பூட்டான், இலங்கைக்கு விரிவுபடுத்தப்பட்டது. தற்போது 9-வது நாடாக கம்போடியாவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- இதற்காக நேஷனல் பேமன்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா, ஏசிஎல்இடிஇ பேங்க் பப்ளிக் லிமிடெட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.
- இதன் மூலம் கம்போடியா செல்லும் இந்திய சுற்றுலா பயணிகள் அங்குள்ள 45 லட்சம் கடைகளில் பணம் செலுத்தலாம். இதற்கு முன்பு வெளிநாடு செல்லும் சுற்றுலா பயணிகள், இந்திய ரூபாயை வெளிநாட்டு கரன்சிகளாக மாற்றி செலவு செய்வதில் பல சிரமங்களை அனுபவித்தனர்.
- தற்போது யுபிஐ முறை பல நாடுகளுக்கு விரிவுபடுத்தப்பட்டு வருவதால், இந்தியர்களுக்கு பணம் செலுத்துவது எளிதாகி உள்ளது.
- அவர்கள் வாங்கும் பொருட்களுக்கு நிகரான ரூபாயின் மதிப்பை அறிந்து வங்கி கணக்கு மூலமாக பணம் செலுத்தலாம்.
- தற்போது முதல் கட்டமாக இந்தியர்கள் கம்போடியாவில் யுபிஐ மூலம் பணம் செலுத்தும் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அடுத்ததாக கம்போடியா மக்கள் இந்தியாவில் யுபிஐ மூலம் பணம் செலுத்தும் முறை கொண்டுவரப்படவுள்ளது.

## இந்திய பெண் ராணுவ அதிகாரிக்கு ஐ.நா. விருது

- ஐ.நா. அமைதிப் படையில் சுமார் 5,000 வீரர்கள் பணியாற்றி வருகின்றனர். ஆண்டுதோறும் மே 29-ம் தேதி ஐ.நா. அமைதிப்படை தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.
- இந்த ஆண்டு ஐ.நா. அமைதிப்படை தினத்தை முன்னிட்டு வீர மரணம் அடைந்த இந்திய வீரர்கள் ஹர்பஜன் சிங், சுஜித் குமார் பிரதான் ஆகியோருக்கு "டாக் ஹம்மர்ஸ்க்ஜோல்ட் பதக்கம்" அறிவிக்கப்பட்டது.
- ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றும் இந்திய ராணுவ பெண் அதிகாரி மேஜர் அபிலாஷா பராக் லெபனானில் முகாமிட்டு உள்ளார். அங்கு பெண்களின் பாதுகாப்பு, முன்னேற்றத்துக்காக அவர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.
- அவரது சேவையை கவுரவிக்கும் வகையில், "மிலிட்டரி ஜென்டர் அட்வகேட் ஆப் தி இயர்" விருது அபிலாஷா பராக்குக்கு அறிவிக்கப்பட்டது.